**கூட்டம் எண். 27** **செங்கல்பட்டு நகராட்சி**

**நாள்.11.03.2026**

**குறள் :** **அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை**

**தெளிவுரை:** **பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறத்தை நாள்தோறும் செய்க. அதுவே உடம்பிலிருந்து உயிர் நீங்கும் காலத்து அழியாத துணையாகும்.**

## அவசரக் கூட்டம்

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆம் தேதி (11.03.2026 ) புதன் கிழமை காலை 11.30 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் அவசரக் கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்.1**

இந்நகராாட்சியில் ஒப்பந்ததாரர்களின் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் GST, TDS மற்றும் IT – TDS E-Filling மாதாமாதம் (திரு.செந்தில்குமார்) M/S Challeger consultancy சென்னை என்ற நிறுவனம் மூலம் செய்யப்பட்டு வருகிறது, மேலும் பணியாளர்கள் வருமான வரி பிடித்தம் பதிவேற்றம் செய்யவும். ஜனவரி–2026 முதல் டிசம்பர்–2026 வரை ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.43/2019/பி1

**தீர்மான எண்.439 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.2**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட குண்டூர் ஏரி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டு பணிகளில் 55 எண்கள் Solar Street Lights அமைத்தல் மற்றும் SS Handrail 1300 மீட்டர் நிறுவுதல் போன்ற பணிகளை மிகுந்த தரத்துடன் மற்றும் பொறுப்புடன் நிறைவு செய்ததற்காக, மேஹா டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கும்

மேலும், இந்தப் பணி பணிகளுக்கான நிதி உதவி மற்றும் பொறுப்பேற்ற BASF Catalysts India Pvt. Ltd. நிறுவனம் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் சமூக பொறுப்புணர்வும் (CSR) பாராட்டத்தக்கதாகும். இந்தத் திட்டம் பொதுமக்களுக்கு பாதுகாப்பான நடைபாதை வசதி மற்றும் சுற்றுச்சூழல் நட்பு விளக்குகள் மூலம் ஏரியின் அழகையும் பயன்பாட்டையும் மேம்படுத்தியுள்ளது.

இதற்காக BASF Catalysts India Pvt. Ltd. மற்றும் மேஹா டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனங்களுக்கு செங்கல்பட்டு நகராட்சி தனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

<u>**அலுவலக குறிப்பு–**</u>
மன்றத்தில் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.440 நாள்.11.03.2026**

பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.3**

செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட 13 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO Plant) அமைத்திட BASF Catalysts India Pvt. Ltd. நிறுவனம் / WATER LIFE INDIA PVT LTD சமூக பொறுப்புணர்வும் (CSR) நிதி உதவி மற்றும் பொறுப்பேற்று ஒத்துழைப்புடன் பணி மேற்கொண்டு மக்கள் பயன்படுத்தும் வகையில் பணி முடிக்கப்பட்டதற்கு மிகவும் பாராட்டத்தக்கதாகும். மேற்படி குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களால் (RO Plant) பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் பயன்படுத்தும் வகையில் இருப்பதால் பொதுமக்களின் மிகுந்து பாராட்டினை பெற்று உள்ளது.

இதற்காக BASF Catalysts India Pvt. Ltd. நிறுவனம் / WATER LIFE INDIA PVT LTD நிறுவனங்களுக்கு செங்கல்பட்டு நகராட்சி தனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

<u>**அலுவலக குறிப்பு–**</u>
மன்றத்தில் பதிவு செய்யலாம்

**தீர்மான எண்.441 நாள்.11.03.2026**
பதிவு செய்யப்படுகிறது.

**பொருள் எண்.4**

செங்கல்பட்டு நகராட்சியில் **2026–2027** ஆம் நிதியாண்டிற்கான வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி குடிநீர் மற்றும் வடிகால் நிதி. கல்வி நிதி ஆகியவற்றிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.183/2026/B1

**தீர்மான எண்.442 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.5**

செங்கல்பட்டு நகராட்சியின் மையப் பகுதியில் உள்ள குண்டூர் ஏரி மட்டுமே இந்நகரத்தின் பொதுமக்களுக்கு நடை பயிற்சி மேற்கொள்ள இளைப்பாறி கொள்ள, சுற்றி பார்த்திட ஏதுவான இடமாக உள்ளது. எனவே அதனை இந்நகர மன்றம் புனரமைத்து, ஏரிக்கரையினை செப்பனிட்டு, நடைபாதை முழுவதுமாக அமைத்து, ஏரிக்கரைகளில் இரண்டு பூங்காக்களை அமைத்து, ஏரிக்கு செல்லும் பாதையினை உருவாக்கி, ஏரியினை சென்றடையும் கால்வாயினை தூய்மை செய்து சிறப்பான முறையில் தயார் செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரபட்டது. இப்பூங்காவினை, ஏரிக்கரையில் உள்ள நடை பாதையினை பராமரிக்க, சமூக விரோதிகள் இரவு நேரத்தில் உள்ளே வராமல் பாதுகாத்திட பொதுமக்கள் முறையாக பயன் படுத்திட ஏதுவாக குண்டூர் ஏரியின் நடை பாதையில் தூய்மை பணி, பூங்கா பராமரிப்பு பணி, கழிவறை தூய்மை பணி போன்ற பணிகளை வெளிக்கொணர்வு முறையில் தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாளர்களை நியமித்து ஒரு வருடத்திற்க்கான பணி மேற்கொள்ள இது போன்ற அனைத்து பணிகளைச் செய்திடவும் கடந்த 25.02.2026 ல் உள்ளூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | Qty | ஒப்பந்ததாரர் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | திரு.பாலாஜி எண்டர்பிரைசஸ், No.SH58,85/1, பிள்ளையார் கோவில் தெரு, ஆலப்பாக்கம், செங்கல்பட்டு. | Appolo Enterprises |
| 1 | செங்கல்பட்டு நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்;27-ல் குண்டூர் ஏரி பராமரிக்கும் மற்றும் கண்காணிப்பு அமைக்கும் பணி | 1 | 1747985.00<br>0.15% | 1756380.00<br>0.33% |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பாலாஜி எண்டர்பிரைசஸ், No.SH58,85/1, பிள்ளையார் கோவில் தெரு, ஆலப்பாக்கம், செங்கல்பட்டு. என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு, மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

பணியின் அவசர அவசியம் கருதி திரு.பாலாஜி எண்டர்பிரைசஸ், No.SH58,85/1, பிள்ளையார் கோவில் தெரு, ஆலப்பாக்கம், செங்கல்பட்டு அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.443 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.6**

செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் கையிருப்பு குறைவாக உள்ளது. எதிர் வரும் நாட்களில் பொது சுகாதாரப் பணிக்காக திடக்கழிவுகளை அகற்றிய பிறகு கிருமி நாசினி நீக்கம் செய்திட தொற்று நோய் பரவாமல் தடுத்திட, நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளீச்சிங் பவுடர் சப்ளை செய்ய கடந்த . 20.02.2026 ல் உள்ளுர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | Qty | ஒப்பந்ததாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | AMR ELECTRICAL ENGINEERING CONTRACTOR GOVERNMENT APPROVED No. 9, SURUTUKKARA STREET, SAIDAPET, VELLORE - 632 012 | SE Sivaranjini Enterprises No.106/A, Acharapakkam GST Road, Madhurandakam - 03306,Chengalpattu Dist. T.N. | Ambattur Industrial Estate Manufacturers' Service Industries Co-operative Society Ltd., Ind. No.784 Ambattur Industrial Estate, Chennai - 600 058. |
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேவையான பொருட்கள் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் வாங்கி பயன்படுத்தும் பணி | 30 | 6,85,000.00/- | 7,80,000.00/- | 9,20,000.00/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் AMR ELECTRICAL ENGINEERING CONTRACTOR GOVERNMENT APPROVED No. 9, SURUTUKKARA STREET, SAIDAPET, VELLORE - 632 012 என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்குவதற்கு, மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு, மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

பணியின் அவசர அவசியம் கருதி AMR ELECTRICAL ENGINEERING CONTRACTOR GOVERNMENT APPROVED No. 9, SURUTUKKARA STREET, SAIDAPET, VELLORE -632012 அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.444 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.7**

செங்கல்பட்டு நகராட்சி தினசரி 21.02 MT திடக்கழிவுகள் உருவாகிறது. மக்கும் கழிவுகள் நுண் உர செயலாக்க மையங்களிலும், மக்காத கழிவுகள் வளமீட்பு மையங்களிலும் செயலாக்கம் செய்ய படுகிறது. தற்போது விரைவில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடை பெற உள்ளது. தேர்தல் நேரத்தில் வாக்காளர் வாக்கு சாவடியில் தூய்மைப்பணி, கிருமி நாசினி நீக்கம் செய்தல், தேர்தல் தொடர்பான அலுவலர்களுக்கான கூட்டம் நடத்துதல் போன்ற பல பணிகள் உள்ளன. இந்நகராட்சியில் மட்டும் 64 வாக்கு சாவடிகள் உள்ளன.

இது தவிர நுண் உர செயலாக்க மையங்களில் தூய்மை பேணுதல், ஈக்களை கட்டுப் படுத்துதல் விழாக்களில் கிருமி நாசினி தெளித்தல் போன்ற மேற்குறிப்பிட்ட பணிகளுக்காக மற்றும் இதர தேவைகளுக்காக பொது சுகாதார நலன் கருதி 500 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்கி வழங்கிட கடந்த 23.02.2026 ல் உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | Qty | ஒப்பந்ததாரர் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | STAR ENTERPRISES No: 204, Amman Nagar, Pungampadi, Erode-638112. Ph: 9843867677. | KAVINAYA ENTERPRISES No:29 13th Street, Ashok Nagar, Chennai - 600 083, Cell: 89255 24549 | SRI ENTERPRISES GSTNO:33ASXPS2708N1ZYNo:30, Gayathri Colony ,Chitillapakkam Chennai-600 064. Cell: 8825 91161 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேவையான பொருட்கள் 500 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்தும் பணி | 1 | 2480.00 | 2520.00 | 2600.00 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் STAR ENTERPRISES No: 204, Amman Nagar, Pungampadi, Erode-638112. Ph:9843867677. என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்குவதற்கு, மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு, மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

பணியின் அவசர அவசியம் கருதி STAR ENTERPRISES No: 204, Amman agar,Pungampadi, Erode-638112. Ph: 9843867677அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.445 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.8**

செங்கல்பட்டு நகராட்சியில் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து தெருநாய்களால் தொடர்ந்து ஏற்படும் தொல்லையை குறைத்திட ஏதுவாக கருத்தடை அறுவை சிகிச்சை மையம் தூக்குமர குட்டை பகுதியில் கட்டப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது.தமிழ்நாடு அரசு மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள தெருநாய்களுக்கு கருத்தடை செய்திட வேண்டும்.

**பின்பற்றவேண்டிய வழிமுறைகள்;-**

1. தெருவில் சுற்றி தெரியும் தெரு நாய்களை பிடித்து அதற்குரிய வாகனத்தில் ஏற்றி அறுவை சிகிச்சை மையத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.
2. அறுவை சிகிச்சை மையத்தில் தகுந்த கால்நடை மருத்துவர் கொண்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்திட வேண்டும்.
3. அறுவை சிகிச்சை முடிந்த பிறகு ஆண் நாய்கள் 3 நாட்களும் பெண் நாய்கள் 5 நாட்களும்

வைத்து பராமரித்திட (Post care) வேண்டும்.

4. அந்நாய்களுக்குரிய உணவு மருந்து தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

5. ரேபிஸ் தடுப்பூசி செலுத்திட வேண்டும்.

6. பின்னர் கருத்தடை அறுவை சிகிச்சை முடிந்து குணமான நாய்களை எங்கு பிடிபட்டதோ அவ்விடத்திலேயே வாகனத்தில் கொண்டு சென்று விட்டு விட வேண்டும்.

7. தொடர்புடைய பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.

8. மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளையும் செய்திட தகுதிவாய்ந்த Non government organised அமைப்பு ஏதேனும் ஒன்றினை இப்பணியில் ஈடுபடுத்தி தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத்துறை நிர்ணயம் செய்துள்ளகருத்தடை அறுவை சிகிச்சை செய்திட மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளையும் செய்திட ஒரு நாய்க்கு ரூ1650 தொகையினை வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு மற்றும் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் தற்போது நிலவும் சூழல் கருதி மேற்குறிப்பிட்ட பணிகள் அனைத்தும் செய்திட தகுதி வாய்ந்த அரசு சாரா அமைப்பு ஒன்றினை இப்பணி செய்திட ஈடுபடுத்திட தேவையான நடவடிக்கைகளை எடுத்திட தோராயன செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.446 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.9**

செங்கல்பட்டு நகராட்சி 33 வார்டுகளிலும் வசிக்கும் பொது மக்களுக்கு கொசுக்களால் ஏற்படும் டெங்கு மலேரியா, சிக்கன்குனியா போன்ற நோய்கள் மூலம் பாதிக்காமல் இருக்க கொசுப்புழு அழிக்க டெமிபாஸ் 200 லிட்டரும், முதிர் கொசு அழிக்க அவுட்டோர் பாக்கிங் செய்ய மாலத்தியன் 300 லிட்டரும், இன்டோர் பாக்கிங் செய்ய பைரித்தரம் 300 லிட்டரும் வாங்கி வழங்கிட கடந்த 26.02.2026 ல் உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | Qty | ஒப்பந்ததாரர் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | A TO Z ENTERPRISES NO:28 SHREE BALAJI NAGAR, PONMAR, VENGADAMANGALAM, CHENNAI - 600127 | V.K.P ENTERPRISES NO:26A MATHIYAZHAGAN MAIN ROAD, MG NAGAR, ULLAGARAM, CHENNAI -600061 |
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு தேவையான பொருட்கள் டெமிபாஸ் 200 லிட்டர், பைரித்தரம் 300 லிட்டர் மற்றும் மாலத்தியன் 300 லிட்டர் வாங்கி பயன்படுத்தும் பணி | 3 | 2,210.00 | 2,497.00 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் A TO Z ENTERPRISES NO:28 SHREE BALAJI NAGAR, PONMAR, VENGADAMANGALAM, CHENNAI - 600127 என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை தொடர்ந்து பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்குவதற்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பணியின் அவசர அவசியம் கருதி A TO Z ENTERPRISES NO:28 SHREE BALAJI NAGAR, PONMAR, VENGADAMANGALAM, CHENNAI – 600127 அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.447 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.10**

செங்கல்பட்டு நகராட்சி மொத்தம் 33 வார்டுகளை உள்ளடக்கிய முதல் நிலை நகராட்சியாகும். இங்கு 17,514 வீடுகள், 75000-க்கும் அதிகமான மக்களும் வசிக்கின்றனர்.

இந்நகராட்சியில் இறந்தவர்களை அடக்கம் செய்திட, எரித்திட எரிவாயு தகன மேடை ஏதும் இல்லை என்பதால் அருகில் உள்ள பழவேலி கிராமத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எரிவாயு தகன மேடைசெயல் பட்டு வந்தது. கொரோனா காலகட்டத்தில் முற்றிலுமாக நிறுத்தப்பட்aடு இருந்த அந்த எரிவாயு தகன மேடை தற்போது புனரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

**<u>பின்வரும் நடவடிக்கைகளை நகராட்சியானது தொடர வேண்டும்</u>**

1. இறந்த உடல்களை எரிப்பதற்கு தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனத்தினை பணியமர்த்திட வேண்டும்.
2. இறந்த உடல்களை எரிப்பதற்கு நகராட்சிக்கு, ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனமானது ரூ.500 (ஒரு இறந்த உடலுக்கு) செலுத்திட வேண்டும்.
3. பழவேலி சுடுகாட்டினை பராமரிக்க, நிர்வாக நடை முறைகளை செயல்படுத்திட நிர்வாகக் குழு ஒன்றினை ஏற்படுத்திட வேண்டும்.
4. இறந்த உடல்களை எரிப்பதற்கு நகராட்சியிடம் இருந்து அனுமதி கடிதம் பெற்ற பிறகு தான் பழவேலி எரிவாயு தகன மேடையில் எரித்திட வேண்டும்.
5. பராமரிப்பு செலவு, மற்றும் பழுது பார்த்தல், தொடர்புடைய தொண்டு நிறுவனத்தினை சார்ந்தது.

இந்த எரிவாயு தகன மேடையினை பராமரிக்க தொண்டு நிறுவனம் ஏதேனும் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து பணியமர்த்தவும், இறந்த உடல் ஒன்றினை எரிப்பதற்கு நகராட்சிக்கு தொண்டு நிறுவனம் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.500 நிர்ணயம் செய்ததற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.448 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சி செங்கல்பட்டு நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் LCV வாகனம் TN 19 AK 6703 மற்றும் TN 19 AM 1426 ஆகிய வாகனங்களுக்கு டயர்கள் மற்றும் டியூப்கள் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க இயலவில்லை என ஓட்டுநர் கடிதம் அளித்துள்ளார் மேற்கண்ட வாகனங்களுக்கு முன்பக்க டயர்கள் நான்கு எண்ணிக்கை பின்பக்க டயர்கள் எண்ணிக்கை நான்கு டியூப்கள் எட்டு எண்ணிக்கை உள்ளூர் நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளி கோரவும், தோராய செலவினம் ரூபாய் மன்ற தீர்மானம் எண் 316. நாள் 16.02.2026 ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. உள்ளூர் நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்ய 25.02.2026 தேதியில் பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளி விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | பணி விபரம் | செங்கல்பட்டு நகராட்சியில் உள்ள இலகு ரக வாகனம் TN 19 AK 6703 மற்றும் TN 19 AM 1426 ஆகிய வாகனங்களுக்கு டயர்கள் மற்றும் டியூப்கள் கொள்முதல் செய்ய |
|---|---|---|
| 1 | அம்பிகா டயர்ஸ்,<br>93/1-A, ஜிஎஸ்டி சாலை,<br>செங்கல்பட்டு - 603 001. | ரூ 25,800/- |
| 2 | ஸ்ரீ குமரவேல் டயர்ஸ்,<br>18/17. முத்து ராஜன் தெரு,<br>அண்ணா நகர் தொடர்ச்சி,<br>செங்கல்பட்டு - 603 001. | ரூ 26,800/- |
| 3 | ஸ்ரீ ஜெயம் டயர்ஸ்,<br>7.பாரதியார் தெரு,<br>செங்கல்பட்டு - 603 001. | ரூ.27,000/- |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.0069/2025/எச்2)

**தீர்மான எண்.449 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

பொருள் எண்.12

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கு வரும் ஜே சி பி பாப் காட்டு வாகனம் TN 19 AT 8446 மின்கலப்பட்டி (BATTERY) கொள்முதல் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 8000/- எட்டாயிரத்திதிற்கு குறுகிய கால விலை புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.0069/2025/எச்2)

**தீர்மான எண்.450 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

பொருள் எண்.13

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்ட வரும் LCV வாகனம் த.நா 19 BA 1201 த.நா 19 BA 1251 மற்றும் த.நா 19 BA 1275 ஆகிய வாகனங்களுக்கு டயர்கள் மற்றும் டியூப்கள் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க இயலவில்லை என ஓட்டுநர் கடிதம் அளித்துள்ளார். மேற்கண்ட வாகனங்களுக்கு முன்பக்க டயர்கள் ஆறு எண்ணிக்கை பின்பக்க டயர்கள் ஆறு எண்ணிக்கை டியூப்கள் பன்னிரண்டு எண்ணிக்கை கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடம் இருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோர ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ 39,000 (முப்பத்தொன்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.0069/2025/எச்2)

**தீர்மான எண்.451 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.14**

செங்கல்பட்டு நகராட்சி பொதுப் பிரிவில் உள்ள Canon Image Runner 2725 ஜெராக்ஸ் மிஷின் மற்றும் Canon Image Runner ஏடிவி 4025 ஜெராக்ஸ் மிஷின் சர்வீஸ் செய்ய ஜெராக்ஸ் தேவையான டோனர் NPG 87 10 எண்ணிக்கை Canon Image Runner ஏடிவி 4025 தேவையான டோனர் 10 எண்ணிக்கை வாங்கிடவும் தோராய செலவினம் ரூபாய் இரண்டு லட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1562/2022/பி2)

**தீர்மான எண்.452 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.15**

செங்கல்பட்டு நகராட்சியில் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான அலுவலக பணிகளுக்கு தேவையான வீட்டு வரி குழாய் வரி ரசீது கணினியில் அச்சிட்டு வழங்கிட 1 முதல் 50000 எண்ணிக்கை வரை ரசீது அச்சிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதில் தற்போது 2000 ரசீதுகள் மட்டுமே இருப்பில் உள்ளன. எனவே, 2026 - 2027 ஆம் ஆண்டுக்கான 50,001 முதல் 1,00,000 வரை 50,000 எண்ணிக்கையிலான வீட்டு வரி குடிநீர் வரி ரசீது அச்சடிக்க தேவையான ரசீதுகள் வாங்கிட தோராய செலவினம் ரூபாய் 2.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1562/2022/பி2)

**தீர்மான எண்.453 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.16**

**ந.க.எண். 48/2026/எப்1** **நாள் . 09 .03. 2026**

**பார்வை:** (i)தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத்திட்டம்), செங்கல்பட்டு அவர்களின் கடிதம் ந.க.எண். அ/201/2025 நாள். 20.01.2026 (ம) 04.02.2026.

(ii)செங்கல்பட்டு நகராட்சி நகர மன்ற தீர்மான எண். 300 நாள்.16.02.2026

(iii)நகராட்சி பொறியாளர் பிரிவு குறிப்பு நாள். 18.02.2026.

(iv)வருவாய் ஆய்வாளர், செங்கல்பட்டு நகராட்சி அவர்களின் குறிப்பு நாள். 18.02.2026

(v) செங்கல்பட்டு நகராட்சி நகர மன்ற முன் அனுமதி நாள்.18.02.2026

(vi)இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.48/2026/எப்1 நாள்.18.02.2026

(vii) தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத்திட்டம்), செங்கல்பட்டு அவர்களின் கடிதம் ந.க.எண். அ/201/2025 நாள். 05.03.2026

.........

பார்வை(i)-ல் கண்டுள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக கடிதத்திற்கிணங்க, செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 3, பிளாக் எண்.16, நகரளவை எண். 737-ல் அமைந்துள்ள சென்னை சாலை இராமர் கோவில் குளம் அருகில் கட்டுமான தொழிலாளர்களுக்கான வசதி மையம் 35'X10'X10' என்ற அளவில் அமைக்க உரிய தடையின்மை வழுங்க நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கபட்டதில் பார்வை (ii)-ல் கண்டுள்ள நகர் மன்றம் வாடகை அடிப்படையில் வசதி மையம் அமைக்கவும் மேலும் மேற்படி இடம் நகராட்சிக்கு தேவைபடும் பட்சத்தில் உடனடியாக திரும்ப வழுங்கபடவேண்டும் என்ற நிபந்தனையுடனும் மாதம்தோறும் வாடகை நகராட்சிக்கு செலுத்தபடவேண்டும் என்ற நிபந்தனைகள் அடிப்படையில் தடையின்மை வழுங்க மன்றம் அனுமதி வழுங்கியுள்ளது. மேற்படி நகர மன்ற அனுமதி வழுங்கபட்டதின் பெயரில் பார்வை (iii)-ல் கண்டுள்ள பொறியாளர் பிரிவு குறிப்பில் வாடகை (ம) 18% GST ஆக மொத்தம் ரூ. 14,538/- வசூலிக்க குறிப்பு வழுங்கபட்டது. அதனடிப்படையில் பார்வை (iv)-ல் கண்டுள்ள வருவாய் ஆய்வாளர், செங்கல்பட்டு நகராட்சி அவர்களின் குறிப்புரையில் வசதி மையம் அமைக்க தடையின்மை வழுங்கபடும் இடத்தின் அருகில் உள்ள கடைகளின் வாடகை கட்டணம் ஆய்வு மேற்கொள்ளபட்டு அதில் அதிகபடியான தொகையான பொறியாளர் பிரிவில் வழுங்கபட்டுள்ள வாடகை கட்டணம் ரூ. 12,320/- மற்றும் 18% GST ரூ. 2218/- ஆக மொத்தம் ரூ. 14,538/- மாதம்தோறும் வசூல் செய்யலாம் என குறிப்பளிக்கப்பட்டதின் பெயரில் பார்வை (v)-ல் கண்டுள்ள நகர் மன்ற முன் அனுமதி பெறப்பட்டு

பார்வை (vi)-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடித உத்தரவு வாயிலாக தொழிலாளர் உதவி ஆனணயர் செங்கல்பட்டு அவர்களுக்கு தடையின்மை வழங்கப்பட்டது. இந்நிலையில் பார்வை (vii)-ல் கண்டுள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு முழுவதும் ஐம்பது இடங்களில் வசதி மையம் அமைத்திட தடையில்லா சான்று வாடகை ஏதுமின்றி வழங்கப்பட்டுள்ளதாகவும் எனவே செங்கல்பட்டு நகராட்சியிலும் வாடகை ஏதுமின்றி வசதி மையம் அமைக்க தடையின்மை வழங்க கோரப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான தொழிலாளர்களுக்கான வசதி மையம் வாடகை ஏதுமின்றி அமைக்கவும் மேலும் மேற்படி இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக திரும்ப ஒப்படைக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தடையின்மை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு—**</u>

பார்வை (vii)-ல் கண்டுள்ள தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ள அண்ணா சாலையில் (வார்டு 3, பிளாக் எண்.16, நகரளவை எண். 737-ல்) கட்டுமான தொழிலாளர்களுக்கான வசதி மையம் அமைக்க போக்குவரத்திற்க்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏதுமின்றி நகராட்சி மூலம் ஆட்சேபணையற்ற இடத்தில் வழங்கப்படும் இடத்திற்கு (35'x10'x10') வாடகை ஏதுமின்றி தடையின்மை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.454 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.17**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA IV) அரசாணை நிலை எண். G.O. (Ms) No. 159. நாள். 02.11.2015 (ம) தமிழ்நாடு அரசிதழ் எண். 230 நாள். 02.11.2015-ன் படி NULM திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலையோர சிறு கடை வியாபார அடையாள அட்டையுடன் வியாபாரம் செய்யும் நபர்களுக்கு நிலுவையில் உள்ள தள்ளு வண்டிகளை (Vending Cart) உடனடியாக வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் நகராட்சி மூலம் நகர் மன்றத்திற்கு பொருள் வைத்து நகர மன்ற அனுமதி பெறப்பட்டு 65 தள்ளுவண்டிகள் சாலையோர சிறு கடை வியாபாரிகளுக்கு வழங்கபட்டுள்ளது. இந்நிலையில் மீதமுள்ள 5 தள்ளுவண்டிகளை தகுதி அடிப்படையில்

சாலையோர சிறு கடை வியாபாரிகளுக்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.** 519/2023/எப்1

**அலுவலக குறிப்பு**:-

மீதமுள்ள 5 தள்ளுவண்டிகளை தகுதி அடிப்பைடையில் 5 நபர்களுக்கு ( **Vending Cart**) வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.455 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 பகுதிகளில் நடைபெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகளால் சேதமைடையும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களை பழுது நீக்கம் செய்து பராமரிப்புப்பணிகள் 6 மாதத்திற்கு மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி செலவினத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.186/2026/இ1)

**தீர்மான எண்.456 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04 பாசித்தெரு பகுதியில் உள்ள குடிநீர் பிரதான குழாய் 300mm AC Pipe சாலையின் நடு பகுதியில் அமைந்துள்ளதால் பாதாளசாக்கடை கழிவுநீர் அமைப்பதற்கு இடையூராக உள்ளது. இதனை மாற்றி சாலையின் ஓரத்தில் 300mm DI Pipe அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.34.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி செலவினத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.186/2026/இ1)

**தீர்மான எண்.457 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28 பழைய ஜி.எஸ்.டி ரோடு (அண்ணாசாலை) குண்டூர் பூங்கா அருகில் பிரதான சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.20.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(ந.க.எண்.186/2026/இ1)

**தீர்மான எண்.458 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 33 பகுதிகளில் பாதாளசாக்கடை திட்டப்பணி ரூ.188.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் மீ விட்டமுள்ள .மி 150 இரட்டைசுவர் நெளி குழாய்கள் மற்றும் இரும்பு குழாய்கள் மீ நீளத்தில்.கி 61.99 அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதியில் உள்ள வார்டுகளில் உள்ள பல தெருக்கள் விடுப்பட்டுள்ளதாகவும், மேற்படி தெருக்களில் பாதாளசாக்கடை அமைத்து தருமாறு கோரி நகர்மன்ற உறுப்பினர்கள் நகர்மன்ற தலைவர் அவர்களிடம் மனு மூலம் கோரியுள்ளார். மேற்படி கோரிக்கையின்படி நகர்மன்ற தலைவர் அவர்கள், ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோர்கள் நேரடி ஆய்வு செய்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளரிடம் ஆலோசனை செய்யப்பட்டதில் பாதாளசாக்கடை விடுப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கள ஆய்வு செய்து திட்ட பிரேரணை மற்றும் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தர கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மதிப்பீடு தயார் செய்திட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) திட்ட பிரேரணை மற்றும் மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.5847/2007/இ1)

**தீர்மான எண்.459 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.22**

மாமண்டூர் தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது 60HP மின் மோட்டார் இயங்கி வருகிறது. கோடைகாலத்தில் குடிநீர் விநியோகம் கூடுதலாக தேவைப்படுவதாலும் கூடுதலாக 4.00 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி 2 எண்ணிக்கை கட்ட இருப்பதால் தற்போது இயங்கி வரும் 60HP மின் மோட்டாருக்கு பதிலாக 75HP மின் மோட்டார் ஒரு எண்ணிக்கை மற்றும் 100HP ஸ்டாட்டர் பொருத்திட தோராய மதிப்பீடு தொகை ரூ.12.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) மேற்படி செலவினத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.186/2026/இ1)

**தீர்மான எண்.460 நாள்.11.03.2026**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.23**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய ஜி.எஸ்.டி ரோடு பகுதியில் அம்ரூத் 2.0 திட்டம் 2022-2023 கீழ் ரூ.294.00 லட்சத்தில் மேம்படுத்தப்பட்ட குண்டூர் ஏரி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.45.00 லட்சம் மற்றும் ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு பூங்காக்கள் திறப்பு விழா 05.03.2026 அன்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலும், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர்

அவர்களால் திறந்து வைத்து விழா சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றினார்கள். இவ்விழாவில் அரசு அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கு மேடை அமைத்தல், சேர், டேபிள், அலங்கார விளக்கு, ஒலி பெருக்கி, கம்பளம் போன்ற அத்தியாவச அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

1. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அளிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(ந.க.எண்.186/2026/இ1)

**தீர்மான எண்.461 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

பொருள் எண்.24

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2025-2026-ன் கீழ் கீழ்காணும் பணிகளுக்கு 25.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் / நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு விகிதத் தொகை சதவீதத்தில் குறைவு / அதிகம் மதிப்பீடு தொகை | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் / நிறுவனம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| <u>வருவாய் நிதி 2025– 26</u> | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.2 ஜெ.சி.கே நகர் பூங்கா அபிவிருத்தி செய்யும் பணி | 14.00 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸ ன் |
| | | | திருவாளர்கள் ஜி.கே. எண்டர்பிரைசஸ் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 2 | வார்டு எண்.2 ஜெ.சி.கே நகர் தாமரை தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 10.60 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸ ன் |
| | | | திருவாளர்கள் ஜி.கே. எண்டர்பிரைசஸ் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 3 | வார்டு எண்.3 காந்திசாலை மற்றும் சின்னம்மன் கோயில் தெருவை இணைக்கும் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.00 | திருவாளர்கள் எஸ்செந்தில்வேல் . டிரேடர்ஸ் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள் எஸ் செந்தில்வேல் . டிரேடர்ஸ் |
| | | | திரு.கேவெங்க. டேசலு | 0.09% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 4 | வார்டு எண்.3 சின்னம்மன் கோயில் தெரு முதல் காந்தி சாலை பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 9.00 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு.கேவெங்க. டேசலு | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | வார்டு எண்.4 ஜபார் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 6.50 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள் பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 6 | வார்டு எண்.4 பழைய பேருந்து நிலையம் அருகில் பயணியர் விடுதி சாலையில் சிறுபாலம் அமைக்கும் பணி | 7.75 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள் பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.17% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 7 | வார்டு எண்.07 கண்ணன் நகர் குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 10.00 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைச ஸ் |
| | | | திருவாளர்கள் பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.15% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 8 | வார்டு எண்.08 தூக்குமரக்குட்டை பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 12.80 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு.கேவெங்க. டேசலு | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | வார்டு எண்.9 கல்வாரிமலை தெருவில் உள்ள வடமலை பள்ளி அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.60 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ். | 0.07% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 10 | வார்டு எண்.9 முத்துமாரியம்மன் கோயில் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.60 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.08% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 11 | வார்டு எண்.9 வடமலை பள்ளியிலிருந்து கல்வாரி மலை தெரு வரை மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் gâ. | 11.30 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.08% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 12 | வார்டு எண்.16 தேவதாஸ் தெரு (வடக்கு பக்கம் விடுப்பட்ட பகுதி) பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | 3.50 | திருவாளர்கள். ஜி.ராஜேஷ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். ஜி.ராஜேஷ் |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | வார்டு எண்.20 முருகேசனார் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 3.25 | திரு.கேவெங்க. டேசலு | 0.05% மதிப்பீட்டை விட குறைவு | திரு.கே வெங்க. டேசலு |
| | | | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.23% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 14 | வார்டு எண்.22 காந்தி சாலை விரிவாக்கம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 5.50 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.17% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 15 | வார்டு எண்.23 வீரகுடி வெள்ளாளர் தெரு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 6.10 | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்ள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 16 | வார்டு எண்.23 டாக்டர் வரதராஜன் தெரு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 16.00 | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்ள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | வார்டு எண்.25-ல் அண்ணாநகர் முதல் குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 6.00 | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்ள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 18 | வார்டு எண்.25 வீரகுடி வெள்ளாளர் தெரு பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 5.00 | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்ள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.31% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 19 | வார்டு எண்.25-ல் பிள்ளையார் கோயில் தெரு LIC ரோடு சந்திப்பில் புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 7.00 | திருவாளர்ள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்ள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.27% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 20 | வார்டு எண்.25 முத்துராஜன் காலனி பகுதியில் உள்ள விளையாட்டு திடலுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு சுற்று சுவர் அமைக்கும் பணி | 20.00 | திரு.கே.வெங் கடேசலு | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திரு.கே.வெங் கடேசலு |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.21% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | வார்டு எண்.26 பாரதியார் தெரு பகுதியில் புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 13.00 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.41% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 22 | வார்டு எண்.28 அளகேசன் நகர் விரிவாக்கம் பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 13.00 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.08% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 23 | வார்டு எண்.30-ல் குறிஞ்சி தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 5.55 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.18% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 24 | வார்டு எண்.30 ராமகிருஷ்ணா மடம் பக்க வாயில் (Side Gate) பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 4.00 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.06% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | வார்டு எண்.30-ல் நடுத்தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 9.50 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திருவாளர்கள். ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 26 | வார்டு எண்.31 RV தெரு EB ஆபிஸ் அருகில் உள்ள தெருவிற்கு புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 11.60 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.07% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 27 | வார்டு எண்.33-ல் 11வது தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.40 | திரு. கே.வெங்கடேசலு | 0.01% மதிப்பீட்டை விட குறைவு | திரு. கே.வெங்க டேசலு |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.04% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 28 | வார்டு எண்.33-ல் 12வது தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 3.30 | திரு. கே.வெங்கடேசலு | 0.01% மதிப்பீட்டை விட குறைவு | திரு. கே.வெங்க டேசலு |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.05% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | பழைய ஜி.எஸ்.டி சாலையில் உள்ள பூங்காவிற்கு பின்பக்கம் சுற்று சுவர், முகப்பு விளக்குகள், பிரதான நுழைவு வாயில் மற்றும் கூடுதல் இதர மேம்பாட்டு பணிகள் | 20.00 | திரு. கே.வெங்கடேசலு | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திரு. கே.வெங்கடேசலு |
| | | | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 30 | குண்டூர் எரியில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பங்களுக்கு அலங்கார விளக்குகள் அமைக்கும் பணிகள் | 5.00 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 31 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 பகுதியில் உள்ள ABC அறுவை சிகிச்சைக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும் பணி | 7.00 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில் வேல் டிரேடர்ஸ் |
| | | | திரு. கே.வெங்கடேசலு | 0.21% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 32 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர்ப்புற சுகாதார நல மையத்தின் முன் நோயாளிகள் அமர காத்திருப்பு கூடம், கழிப்பிடம் மற்றும் உயிரியல் மருத்துவ கழிவுகள் பிரித்தல் அறை (Bio Medical Segregation Room) ஆகிய கூடுதல் பணிகள் | 8.50 | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எம்.எஸ்.டி கன்ஸ்ட்ரக்ஸன் |
| | | | திரு.என்.கங்காதரன். | 1.47% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 33 | முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கான காலை உணவு வழங்கும் இடங்களான நகராட்சி அலுவலகம், வடமலை நகராட்சி நடுநிலை பள்ளி, பெரிய மணியக்கார தெரு (நகராட்சி பள்ளி) அனுமந்தபுத்தேரி நகராட்சி பள்ளி, அரசு மருத்துவமனை வளாகம், புதிய பேருந்து நிலையம் ஆகிய 6 இடங்களில் குடிநீர் வசதி, கை கழுவும் வசதி, கழிப்பறை வசதி, அமர்ந்து உணவருந்தும் வசதிகள் மேற்கொள்ளும் பணி | 6.50 | திருவாளர்.ஜி.கே. எண்டர்பிரைசஸ் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்.ஜி. கேஎண்டர் பிரைசஸ் |
| | | | திரு.என்.கங்காதரன். | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 34 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து தேர்தல் வாக்குச்சாவடி நிலையங்களில் குடிநீர் வசதிகள் ஏற்பாடு செய்தல், தற்காலிக தங்கும் இடம் அமைத்தல், நாற்காலி வசதிகள் செய்து தருதல் மற்றும் இதர அனைத்து அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணி | 8.00 | திருவாளர்.ஜி.கே. எண்டர்பிரைசஸ் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்.ஜி. கேஎண்டர் பிரைசஸ் |
| | | | திரு.என்.கங்காதரன். | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35 | செங்கல்பட்டு நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் 6 மாத காலத்திற்கு 2 தொழில் நுட்ப உதவியாளர்கள் பணி அமர்த்திடல் | 6.00 | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். பாலாஜி எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 1.22% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 36 | செங்கல்பட்டு நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் 6 மாத காலத்திற்கு 5 தட்டச்சர் பணியாளர்களை பணி அமர்த்திடல் | 7.80 | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். பாலாஜி எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.20% மதிப்பீட்டை விட அதிகம் | |

**அலுவலக குறிப்பு—**

வரிசை எண்.01 முதல் 36 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதத்திலும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1388/2025/இ1)

**தீர்மானஎண்.462 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

**பொருள் எண்.25**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் நிதி 2025-2026-ன் கீழ் கீழ்காணும் பணிகளுக்கு 25.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் / நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு விகிதத் தொகை சதவீதத்தில் குறைவு / அதிகம் மதிப்பீடு தொகை | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் / நிறுவனம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| **குடிநீர் நிதி 2025– 26** | | | | | |
| 1 | வார்டு எண்.08 கங்கையம்மன் கோயில் தெரு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் தொட்டி அமைக்கும் பணி | 4.00 | திருவாளர்கள். பாலஜி எண்டர்பிரைசஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். பாலஜி எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள் அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 2 | வார்டு எண்.11 தட்டான் மலை நீர்தேக்க தொட்டியிலிருந்து சுந்தரவினாயகர் கோயில் வரை குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 10.75 | திருவாளர்கள் பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள் பாலாஜி எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள் அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.12-ல் மலைப்பூங்கா பகுதியில் உள்ள நீர்தேக்க தொட்டியினை புணரமைப்பு செய்தும் மற்றும் இதர பணிகள் | 2.00 | திருவாளர்கள் என்கங்காதரன். | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள் என்கங்காதரன். |
| | | | திருவாளர்கள், ஜி.கே.எண்டர் பிரைசஸ் | 0.16% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 4 | வார்டு எண்.19-ல் நாவலர் நெடுஞ்செழியன் தெரு மற்றும் அங்காளம்மன் கோயில் தெருவில் 3" PVC பைப் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 4.00 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.17% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 5 | வார்டு எண்.20 காந்தி சாலை பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் குடிநீர் தொட்டி அமைக்கும் பணி | 4.00 | திருவாளர்கள். அப்போலோ எண்டர்பிரைசஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். அப்போலோ எண்டர் பிரைசஸ் |
| | | | திருவாளர்கள். பாலாஜி எண்டர்பிரைசஸ் | 0.15% மதிப்பீட்டை விட அதிகம் | |
| 6 | வார்டு எண்.31 ஜிப் கம்பெனி பின்புறம் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் (GI Pipe Line) அமைக்கும் பணி | 7.70 | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள். எஸ்.செந்தில்வேல் டிரேடர்ஸ் |
| | | | திருவாளர்கள். கேவெங்கடேசலு. | 0.12% மதிப்பீட்டை விட அதிகம் | |

**அலுவலக குறிப்பு–**

வரிசை எண்.01 முதல் 6 வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மதிப்பீட்டை விட குறைந்த விலை விகிதத்திலும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1388/2025/இ1)

**தீர்மான எண்.463 நாள்.11.03.2026**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி